Arimaa Nokku Journal ISSN: 2320-4842
(UGC Care Group-I Journal) Vol-18 No. 03 July-September 2024

# மலைபடுகடாமில் கூத்தர்களின் இசைக்கருவிகள்

**முனைவர் வா. சித்ரா**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஆர் வி எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை - 641402

## ஆய்வுச்சுருக்கம்

*கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்*
*ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்*
*பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்*
*சென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும்*
*(தமிழ் இலக்கிய வரலாறு பக்கம் 55)*

*என்னும் நூற்பா ஆற்றுப்படை நூல்களுக்குரிய விதியைப் பகர்கிறது. மலைகளில் எழும் பல்வேறு ஓசைகளைத் திறம்பட எடுத்துரைக்கும் நூலான கூத்தராற்றுப்படையில் கூத்தர் இசைக்கும் இசைக்கருவிகள்இ அக்கருவியை இசைத்தலின் அவசியம்இ பயன்பாடு குறித்து கூறப்பட்ட செய்திகள.;*

*திருமழை தலைஇய இருள்நிற விசும்பின்*

*விண்அதிர் இமிழ்இசை கடுப்ப பண் அமைத்து*

*திண்வார் வசித்த முழவொடு ஆகுளி*

*நுண்உருக்கு உற்ற விளங்கு அடர்ப பாண்டில்*

*மின்இரும் பீலி அணித்தழைக் கோட்டொடு*

*(மலை-1)*

*பத்துப்பாட்டில் ஒன்றான மலைபடுகடாமின் முதற்பாடலே இசைக் கருவிகளைக் குறிப்பனவாக அமைந்துள்ளது மலைபடுகடாம் என்ற பாடல் கூத்தரை ஆற்றுப்படுத்தியமையால் கூத்தராற்றுப்படை என்றும் அழைக்கப்படுகின்றது. மலைக்கு யானையை உவமையாகக் கூறியதாலும் மலைபடுகடாம் என்று அழைக்கப்படுகிறது இந்நூல் ஆசிரியப்பாவால் அமைந்த 583 அடிகளைக் கொண் டுள்ளது செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னனை இரணிய முட்டத்துப் பெருங்கன்றூர்ப் பெருங் கௌசிகன் பாடியதாகும்.*

*சிறந்த இசை நாட்டிய இலக்கியமான மலைபடு கடாமில் இசை என்ற சொல்லாட்சிஇ பண் பற்றிய செய்திகள்இ இசைக்கருவிகள் பற்றிய செய்திகள் தொகுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.*

## முன்னுரை

*தமிழ் கூறும் நல்லுலகிற்கு அருங்கொடையாகத் திகழ்வது சங்க இலக்கியம் இது காதலும், வீரமும் பற்றிய பாடல்களின் தொகுப்பு ஆகும். சங்க இலக்கியத்தை ''பாட்டும் தொகையும்" என்று சங்கச் சான்றோர்கள் குறிப்பிடுகின்றனர் பாட்டு என்பது பத்துப்பாட்டையும், தொகை என்பது எட்டுத் தொகையும் குறிக்கும். ''மூத்தோர்கள் பாடியருள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்'' என்று தமிழ் விடுதூது ஆசிரியரும்,*

***"பத்துப்பாட்டாதி மனம் பற்றினார் பற்றுவரோ"***

***(ப.பா. மூலம் ப. 10)***

*என்று மனோன்மணீயம் சுந்தரனாரும் பத்துப்பாட்டைப் பாராட்டுவர். பத்துப்பாட்டின் பாதி ஆற்றுப்படை என்று கூறுவர் ஆற்றுப்படைக்கு இலக்கணம் தொல்காப்பியம் கூறியுள்ளது சிறிய யாழைக் கொண்டு வாழ்ந்த சிறுபாணனைப் பற்றிப் பாடுவது சிறுபாணாற்றுப்படை, பெரிய யாழைக் கொண்டு வாழ்ந்த பெரும் பாணனைப் பற்றிப் பேசுவது பெரும்பாணாற்றுப்படை, பொருநனைப் பாடிய பாட்டு பொருநராற்றுப்படை. யாரிடம் ஆற்றுப்படுத்துகிறானோ அத்தலைவன் பெயரைக் கொண்டு அமைந்தது. திருமுருகாற்றுப்படை, கூத்தர்கள் எல்லாக் கூத்தையும் செய்யும் வல்லவர்கள் அக்கூத்தரைப் பற்றிய பாடல் கூத்தராற்றுப்படை என்று அமையப் பெற்றுள்ளது.*

*இவ்வாற்றுப்படை நூல்களில் இசைக் கருவிகளின் பயன்பாடு மிகுதியும் காணப்படுகிறது குறிப்பாக கூத்தராற்றுப்படையில் இசை மற்றும் இசைக் கருவிகளின் மேன்மை அதிகம் காணப்படுகிறது இக்கருவிகளின் சிறப்பை வெளிக்கொணரும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.*

## மலைபடுகடாமில் இசைக் கருவிகள்

*வள்ளல் நன்னனிடம் பரிசில் பெறவரும் கூத்தர்களை, அவ்வள்ளலிடத்து பரிசில் பெற்றான் ஒருவன் ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது மலைபடுகடாம். இதில் கூத்தர்களும் விறலியரும் காட்டு வழியினிடைச் செல்லும் பொழுது அவ்வழிகளில் உண்டான நன்மை, தீமைகளும் அதில் இசை பெற்ற இடத்தையும் இதன் ஆசிரியர் பெருங்கௌசிகனார் கூறுகிறார்.*

*பண்பட்ட எல்லா இனங்களும் தத்தமக்குரிய இசை மரபுகளைக் கொண்டுள்ளன அனைத்துப் பயிர்களையும் தன்வயப்படுத்துவது இசை ஆகும். மிடற்றிசையிலும், கருவியிசையிலும் தமிழ் மக்கள் மேம்பட்டிருந்தனர்.*

*இசை மனத்தைப் பண்படுத்தக் கூடியது அனைவரையும் தன்வயப்படுத்தக் கூடியது நுண்கலைகளுள் மிக நுடபமாகவும், சிறப்பாகவும் மதிக்கப்படுவது இசைக்கலை பல்வேறு வகையான ஒலிகளை எழுப்பி மக்களை மகிழ்ச்சியடையச் செய்வதற்கு பல்வேறு வகையானக் கருவிகள் தேவைப்பட்டன.*

*இசை செவியால் உணர்வது மனதிற்கு இன்பத்தைத் தரக்கூடியது மொழிக்கு அப்பாற்பட்டு நின்று இன்பம் அடையச் செய்கிறது இசைக்கலை வாய்மொழியாலும், கருவியின் வாயிலாகவும் அமையக் கூடியது. இசைக் கருவியின் பயன்பாடு பழங்காலம் முதல் இக்காலம் வரை வளர்ந்து கொண்டிருக்கிறது.*

*இசையாராய்ச்சிக்கு முதன்மையானது இசைக் கருவிகள் இவை தோற்கருவி, நரம்புக்கருவி, துளைக்கருவி கஞ்சக்கருவி என்ற வகையில் கையாளப்பட்டுள்ளது. திருவிழாக் காலங்களிலும் கோவில் பூசைக் காலத்திலும் பல இசைக் கருவிகளைப் பயன்படுத்தினர் அவை உடுக்கை. கால்வடம், குழல், குடமுழா, சங்கு, சிறுகுழல், சல்லா, சிலம்பு, தக்கை, தண்ணுமை, தாளம், துடி, பறை, மிடலும் முரசு, தமருகம் போன்ற எண்ணற்ற கருவிகளை மக்கள் பயன்படுத்துகிறார்கள்*

## கூத்தராற்றுப்படையில் இசைக் கருவிகள்

*கூத்தர்கள் எடுத்துச் சென்ற பல்வேறு இசைக் கருவிகளின் பெயர்கள் ஆகுளி, எல்லெரி, குழல், குரும்பரந்தூம்பு, சிறுபறை சீரியாழ், தட்டை, தண்ணும்மை, துடி, தூம்பு, பதலை பன்றிப்பறை, பாண்டில், பேரியாழ், முழவு, யாழ், வார்கட்டிய மத்தளம், தகட்டுத்தாளம், யானைத் துதிக்கைப் போள்ற வங்கியம், கிளி என்னும் ஒலி தரும் தும்பு, இனிய குழ தவளைக் குரலுடைய தட்டைப்பறை, வல்வாய் எல்ல போன்ற பல்வேறு விதமான இசைக்கருவிகள் கையாள பட்டுள்ளன.*

***“திருமழை தலை இய இருள்நிற விசும்பின்***

***விண்அதிர் இமிழ்இசை கடுப்பப் பண் அமைத்துத்***

***திண்வார் வசித்த முழவொடு ஆகுளி***

***நுண்ணுருக்கு உற்ற விளங்கு அடரப் பாண்டில்***

***……………………***

***தொடிதரு பாணிய பதலையும் பிறவும்"***

***(மலைபடுகடாம் 1-10)***

*என்ற வரிகள் புலப்படுத்துகின்றது இவற்றில் பறை, யாழ், தட்டை, குழல் போன்ற இசைக்கருவிகள் மட்டும் இங்கு கையாளப்படுகிறது.*

## ***பறை***

*சங்க காலம் முதல் இன்று வரை சிறப்பிடம் பெற்றுள்ளது பறையாகும். இது ஓசை தரக்கூடிய கருவியாகும். மக்களிடையே செய்திகளைத் தெரிவிப்பதற்காக இக் கருவியை பறை அறைந்து ஒலி எழுப்பி தெரிவிப்பது வழக்கத்தில் இருந்திருக்கிறது கிராமங்களில் இன்றும் இவ்வழக்கம் கையாளப்படுகிறது.*

***“தெய்வம் உணாவேமா மரம் புள் பறை***

***செய்தி யாழின் பகுதியொடு" (தொல். பொருள். 969)***

*இந்நூற்பாவின் மூலம் பறை, யாழ் போன்றவை கையாளப்பட்டுள்ளது தெளிவாகிறது.*

*வள்ளுவர் காலத்தில் பல்வேறு இசைக் கருவிகள் பயன்பாட்டில் இருந்திருக்கிறது அவற்றில் குழல், யாழ் போன்றவை மக்களால் பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை,*

***“குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள்***

***மழலைச் சொற் கேளாதவர்”***

***(குறள்)***

*என்ற குறள்வழி உணர முடிகிறது.*

***“படுத்துவைத் தன்ன பாறை மருங்கின்***
***எடுத்து நிறுத்தன்ன இட்டருஞ் சிறுநெறி”***
***(மலைபடுகடாம் 14-15)***

*என்பதால் மலைபடுகடாமில் பறைக்கிருந்த முக்கியத் துவத்தை உணரமுடிகிறது.*

## ***யாழ்***

*மிகப் பழமையான இசைக்கருவி யாழ் இது உலகின் பல நாடுகளில் கையாளப்பட்டிருக்கிறது பழங்காலத்தில் இந்தியா முழுவதும் இக்கருவி சிறப்புடன் பயன்படுத்தப் பட்டிருக்கிறது “மருப்பு, விலங்கின் கொம்பு, யானை தந்தம், மரக்கொம்பு என்னும் பல பெயர்களில் யாழ் உள்ளது. என்று மெய்யப்பன் தமிழ் அகராதி கூறுகிறது ஆதி என்பதின் திரிபே யாழ் ஆகும். யாழின் வளர்ச்சி வீணை என்று மருவி காணப்படுகிறது இதனை,*

***“நேர் வைத்த வீணைக்கும் யாழுக்கும் நிலை வகையாற்”***

*என்று பெரிய புராணம் குறிப்பிடுகிறது*

*குறிஞ்சி யாழ். மருத யாழ் போன்ற குறிப்புகள் சங்க காலத்திற்கு முன்பே இடம் பெற்றுள்ளன*

*யாழ் என்னும் இக்கருவி வளைந்து பார்ப்பதற்கு அழகாக இல்லை என்றாலும் இவற்றின் செயல் இனிமையானது இதிலிருந்து வரும் இசையானது கேட்பதற்கு இனிமை பயப்பதாக அமைந்திருக்கும்.*

***"களைகொடிது யாழ்கோடு செல்லிநாங்கு அன்ன***

***வினைபடு பாலால் கௌளல்"***

***(குறள்)***

*என்ற குறளின் மூலம் மனிதத் தன்மையை யாழினினோடு விளக்கிக் கூறியிருப்பது இதன் பெருமையை உணர்த்தக் கூடியதாக இருக்கிறது யாழ் என்ற இக்கருவி கி.பி 11ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழ்நாட்டில் வழக்கொழிந்து விட்டது இதற்குப் பதிலாக இப்பொழுது வீணை என்னும் இசைக்கருவி வழங்கி வருகிறது.*

***"நுணங்கு அரம் நுவறிய நுண்நீர் மாமை***

***களங்கனி அன்ன கதழ்ந்துகிளர் உருவின்***

***வணர்ந்து ஏந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேழியாழ்"***

***(மலைபடுகடாம் 35-37)***

*என்பதில் பேரியாழின் இயல்பு குறித்து கூறப்படுகிறது.*

***"முன்னோன் வாங்கிய கடுவிசைக் கணைக்கோல்***

***இன்னிசை நல்யாழ்ப் பத்தரும் விசிபிணி"***

***(மலைபடுகடாம் 380-38)***

## ***தட்டை***

*கிளிகளை விரட்ட பயன்படுத்தக்கூடிய கருவி தட்டை எனப்படும். இது கிளிக்கடிக் கருவி, பரந்தவடிவம், தருகாணி, கவன், கரடிப்பறை, தீ என்னும் பெயர்கள் பெற்றுள்ளன.*

***"பருவாய்த் தேரை தட்டைப் பறையின்***

***கறங்கும் நாடன்" (குறுந்.193)***

*என்பதாக தட்டையின்று ஒலி தேரை ஒலி போன்று உள்ளது. என்று குறுந்தொகை குறிப்பிடுகிறது.*

***"நடுவு நின்று இசைக்கும் அரிக்குரல் தட்டை" (மலை.9)***

*என்ற மலைபடுகடாம் குறிப்பிடுவதால் தட்டையைப் பற்றி அறியமுடிகிறது.*

## *நிறைவாக*

- *சங்க காலம் முதல் கருவிகளின் பயன்பாடு மக்களி டையே அதிகமாகக் காணப்பட்டுள்ளது*

- *இசைக்கலை போற்றத்தக்கதாக இருந்திருக்கிறது தமிழர்கள் இசைக்கு பெரிதும் மதிப்பளித்துப் போற்றி யுள்ளார்கள்*

- *இதனால் பல்வேறு விதமான இசை நூல்கள் தோன்றியுள்ளன*

- *தமிழர்கள் இசைக் கருவிகளுக்குப் பெரிதும் முக்கியத்துவம் அளித்தவர்கள் என்பது அவர்கள் பயன் படுத்திய இசைக் கருவிகள் மூலம் அறிய முடிகிறது கருவிகள் தோற்கருவி, நரம்புக்கருவி, துளைக்கருவி, கஞ்சகக் கருவி என்ற வகையில் சங்ககாலம் முதல் பயன்படுத்தப்பட்டுள்ளது*

- *திருவிழாக் காலங்களிலும், கோவில் பூசைக் காலங் களிலும் இசைக் கருவிகள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன கூத்தராற்றுப்படையில் வெவ்வேறு விதமான இசைக் கருவிகள் கையாளப்பட்டுள்ளதை அறிய முடிகிறது*

- *கூத்தராற்றுப்படையில் இடம் பெற்ற இசைக் கருவிகளில் யாழ், பறை, தட்டை, குழல் போன்றவை மிகுந்த பயன்பாட்டில் இருந்திருக்கிறது என்பதை உணரமுடிகிறது.*
- *ஆற்றுப்படை நூல்களில் கூத்தராற்றுப்படை எனப்படும் மலைபடுகடாமில் அதிகமான இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது*

## *துணைநின்ற நூல்கள்*


1. *மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி ஆகஸ்டு 2019 சென்னை*

2. *முத்து. இராமமூர்த்தி, மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றுப்படை மூலமும் தெளிவுரையும் 2016 நியூ செஞ்சரி புக் ஹவுஸ் அம்பத்தூர்*

3. *இளம்பூரணம், தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல், புறத்திணையியல் 12019 தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு*

4. *திரு. முருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் பெரியபுராணம் சென்னை*

5. *மகாவித்துவான் இரா. இராகவையங்கார் குறுந்தொகை 2014 நியூ செஞ்சரி புக் ஹவுஸ் அம்பத்தூர்*